1969 மார்ச் 10]

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 23-க்கு திரு. எஸ். ராமலிங்கம் அவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிராகரிக்கப்பட்டது.

திரு. சி. கோவிந்தராசன் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படும்.

ஏனைய வெட்டுத் தீர்மானங்களெல்லாம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,91,36,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 29-க்கான வெட்டுத் தீர்மானங்களெல்லாம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,59,58,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிகோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு மீண்டும் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

6. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள். பி. ப. 2-45

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, notifications and other papers.

*72. Note on Demand No. 29—Public Works—Grants-in-Aid English and Tamil).

* Despatched to Members on 8th March 1969.